# பயிற்சி 50

## வினைமுற்றை அறிந்து கொள்க.

**வினைமுற்று** - ஒரு வினையின் கருத்தை முழுமையாக முடித்திருக்கும்.

- காலம், திணை, எண், இடம், பால் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும்.

**(உ-ம் வினைமுற்று - படித்தாள்)**

| காலம் | திணை | எண் | இடம் | பால் |
|---|---|---|---|---|
| இறந்த காலம் | உயர்திணை | ஒருமை | படர்க்கை | பெண்பால் |

**கீழ்க்காணும் வாக்கியங்களை வாசித்து அட்டவணையில் சரியாகப் பூர்த்தி செய்க.**

1. புலி மானைக் கொன்றது.
2. நீ என்ன செய்தாய்?
3. மல்லிகா பள்ளி செல்கிறாள்.
4. புலவர் பாடல் இயற்றினார்.
5. ஓவியர் படம் வரைவார்.
6. நான் பாடம் படித்தேன்.

| | வினைமுற்று | காலம் | திணை | எண் | இடம் | பால் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| 2. | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| 3. | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| 4. | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| 5. | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| 6. | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |



LIVEWORKSHEETS